# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் புதூஹ் பள்ளிவாயிலில்
## 08.02.2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

இன்றும் நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபாக்களின் பல்வேறு கனவுகளையும், ஆன்மீகக் காட்சிகளையும் எடுத்துக் கூறுவேன். இவர்களுக்கு இறைவனுடன் இருந்த தொடர்பு மற்றும் இறைவன் இவர்களுடன் நடந்து கொண்ட விதம் ஆகியவற்றிலும் இறைவன் இவர்களுக்கு கூறிய அறிவுரைகளிலும் இன்றும் நமக்கு பாடம் இருக்கிறது.

**ஹஸ்ரத் மியான் முஹம்மது ஸஹூருத்தீன் சாஹிப்** 1905 ஆம் ஆண்டு பைஅத் செய்தவர்கள் ஆவார்கள். இவர்கள் கூறுகின்றார்கள்:

நான் பட்டினியின் நிலையில் பிற்பகல் 12.00 மணிக்குப் படுத்திருந்தேன். எனது மனைவி என் உடலை அமுக்கிக் கொண்டிருந்தார். இந்நிலையில் எனக்கு தூக்கம் வந்தது. கனவில் நான் பார்க்கிறேன். ஒரு பெண்மணி ஊதா நிற ஆடை அணிந்து என் வீட்டிற்கு வருகிறாள். அவளது ஒரு கையில் பால் கிண்ணம் இருந்தது. அதை அவள் என்னிடம் கொடுத்து, மியான் ஜி! இந்தப் பாலை நான் உங்களுக்காக கொண்டு வந்துள்ளேன். நீங்கள் இதைக் குடியுங்கள் என்றாள். நான் குடிக்க முற்பட்ட போது இதில் சர்க்கரை போடப்பட்டுள்ளது. எனவே அதை கலக்கிக் கொள்ளுங்கள் என்றாள். நான் பாலில் சர்க்கரையைக் கரைத்ததும் என் கண்கள் திறந்தன. நான் தூக்கத்திலிருந்து கண் விழித்தேன். என் உடலை அமுக்கிக் கொண்டிருந்த என் மனைவி நீங்கள் பயந்து விட்டீர்களா? என்று கேட்டாள். நான் பயப்படவில்லை. ஒரு கனவு கண்டேன் என்று கூறி அந்தக் கனவை எனது மனைவியிடம் கூறினேன். பிறகு நான் அதை மறந்து விட்டேன். கொஞ்ச நேரம் கழிந்ததும், அதாவது 5 நிமிடங்கள் கழிந்ததும் இதைப் போன்று ஊதா நிற ஆடை அணிந்து கையில் பால் கிண்ணத்துடன் ஒரு பெண் என் வீட்டிற்கு வந்தார். அவர் எனது மாணவனின் தாய் ஆவார். அவர் வந்து எனக்கு பால் கிண்ணத்தைக் கொடுத்தார். இதைக் குடியுங்கள் என்றார். நான் அதைக் குடிக்க முற்பட்ட போது இதில் சர்க்கரை சேர்க்கப்பட்டுள்ளது. அதை கலக்கிக் கொள்ளுங்கள் என்றார். எனது மனைவி இந்த சம்பவத்தை உன்னிப்பாக பார்த்துக் கொண்டிருந்தாள். சிரித்தவாறு, இது உங்கள் கனவாகும். இதை நீங்கள் என்னிடம் கூறினீர்கள். அது சொல்லுக்கு சொல் அப்படியே நிறைவேறுகிறது.

சில நேரம் அல்லாஹ் இப்படிப்பட்ட கனவுக்கு விளக்கம் தருகிறான். ஒரு நல்ல மனிதரின் பசியைப் போக்குவதற்காக உடனடியாக அல்லாஹ் ஏற்பாடு செய்கிறான். இறைவனை மறுப்பவர்கள் இது ஏதோ தற்செயலாக நிகழ்ந்த சம்பவமாகும். தற்செயலாக அவருக்கு இப்படி ஒரு சிந்தனை தோன்றியிருக்கலாம் என்று கூறலாம். இரு புறமும் அல்லாஹ் இவ்வாறு சிந்தனையை வழங்குகிறான். எனவே இது தற்செயலாக நிகழ்ந்திருக்க முடியாது. இந்த வல்லமை அல்லாஹ்வின் வல்லமையாகும். அதாவது ஒரு பெண்ணின் மனதில் ஒரு நல்ல மனிதரின் பசியைப் போக்க வேண்டும் என்ற சிந்தனையை உருவாக்கினான். உடனடியாக அதை நிறைவேற்றியும் விட்டான்.

**ஹஸ்ரத் மவ்லவி அப்துர் ரஹீம் சாஹிப்** நய்யர் 1901 ஆம் ஆண்டு பைஅத் செய்தார்கள். இவர்கள் கூறுகின்றார்கள்:

நான் மேல்நிலைப் பள்ளியின் ஆசிரியராக இருந்த போது, மவ்லவி சேர் அலி சாஹிப் அப்போது தலைமையாசிரியராக இருந்தார்கள். விளையாட்டுப் பிரிவுக்கு நான் பொறுப்பு வகித்து வந்தேன். இந்த விசயத்தில் அவருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதே இரவு நான் தஹஜ்ஜுத் தொழுகையில் துஆ செய்தேன். கருத்து வேறுபாட்டின் காரணமாக நான் மிகவும் சிரமத்தில் இருந்தேன். தஹஜ்ஜுத் தொழுகையில் துஆ செய்த போது மெல்லிய காகிதத்தில் No Tournament No Games என்று எழுதியிருந்தது காட்டப்பட்டது. அதன் பிறகு நான் உடல்நிலை சரியில்லாமல் போனதால் Tournament –ல் பங்கு பெற முடியவில்லை. Tournament –ன் நாட்களில் தொடர் மழையின் காரணமாக குர்தாஸ்பூர் Tournament கமிட்டி, விளையாட்டுப்

போட்டியை இரத்து செய்து விட்டது. ஒரு இல்ஹாம் பூர்த்தியான காரணத்தால் எங்களது மாணவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. இவர்கள் இந்தக் கனவை விளையாட்டு வீரர்களுக்கும் கூறியிருந்தார்கள். எனவே எங்கள் ஆசிரியரின் இல்ஹாம் பூர்த்தியாகி விட்டது என்று மகிழ்ந்தார்கள். அந்த மாணவர்கள் முழக்கங்கள் இட்டவாறு காதியானுக்கு வந்தார்கள். இந்த இல்ஹாமின் முழு விபரமும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு சென்று சேர்ந்தது. நான் மிகவும் விளக்கமாக எழுதினேன். இதற்கு ஹுஸூர் அவர்கள் உங்களது இல்ஹாம் மிகவும் தெளிவாக நிறைவேறி விட்டது. இது உங்களது தூய உள்ளத்தின் அடையாளமாகும் என்றார்கள். இவ்வாறு ஹுஸூர் குத்தாம்களின் கஷ்ஃப் மற்றும் கனவு நிறைவேறும் போது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வந்தார்கள்.

**ஹஸ்ரத் சேக் அதா முஹம்மது சாஹிப்** மஞ்சுவான் என்ற ஊரின் முன்னாள் வருவாய்த்துறை அதிகாரி கூறுகின்றார்கள்:

சுவர் தொடர்பான வழக்கு நடந்து கொண்டிருந்த போது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தேதி வந்ததும் பட்டாலாவுக்கு சென்றிருந்தார்கள். காதியானில் அவர்களின் சித்தப்பாவின் மகன்களின் சுவர் தொடர்பாக ஒரு வழக்கு இருந்தது. அப்போது ஹுஸூர், யாருக்கு கனவு வந்தாலும் எனக்கு தெரியப்படுத்துங்கள் என்றார்கள். ஏனென்றால் நீர் இரண்டாவது யூசுஃப் ஆவீர் என்று இறைவன் என்னிடம் கூறியுள்ளான். யூசுஃபிற்கும் அவர்களின் சகோதரர்களின் மூலமாக துன்பம் ஏற்பட்டது என்றார்கள். அப்போது நான் ஹுஸூரிடம் ஒரு கனவைக் கூறினேன். நான் ஒரு இனிப்பான தர்பூசணி சாப்பிடுகிறேன். அதிலிருந்து ஒரு துண்டை நான் எனது மகன் அப்துல்லாஹ்வுக்கு கொடுத்தேன். அது காய்ந்து விட்டது என்று கூறினேன். அதற்கு ஹுஸூர் அவர்கள் உமது வீட்டில் இந்த மனைவியின் மூலம் உமக்கு இன்னொரு மகன் பிறப்பான். ஆனால் அவன் உயிருடன் இருக்க மாட்டான் என்றார்கள். அவ்வாறே எனக்கு ஒரு மகன் பிறந்தான். 11 மாதங்கள் ஆனதும் அவன் வஃபாத் ஆகி விட்டான். அதன் பிறகு இந்த மனைவியுடன் வேறு பிள்ளை பிறக்கவில்லை. இந்தக் கனவு வழக்கு சம்பந்தப்பட்டதாக இல்லை. எனினும் அவர்கள் அப்போது கனவு கண்டதால் அதை கூறி விட்டார்கள்.

**ஹஸ்ரத் அமீர் கான் சாஹிப்** 1903 ஆம் ஆண்டு பைஅத் செய்தார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்:

ஜனவரி 1917 ஆம் ஆண்டு வியாழக்கிழமை நான் கனவில் ஒரு நபர் மிகவும் வேகமாக குதிரை ஓட்டுவதைக் கண்டேன். நான் ஒரு கிணற்றிற்கு அருகில் மைதானத்தில் நிற்கிறேன். அந்த நபர் குதிரையை விட்டு இறங்கி என்னிடம் வந்து நான் ஒரு அரசனாவேன். எனது பெயர் அஹ்மது அலி ஆகும். எனக்காக துஆ செய்யுங்கள் என்கிறார். அப்போது நான் துஆ செய்வதற்காக கைகளை உயர்த்தினேன். அவரும் என்னுடன் சேர்ந்து துஆ செய்தார். நாங்கள் துஆ செய்து முடித்ததும் அவர் உடனே குதிரையில் ஏறி மிகவும் வேகமாக குதிரையை ஓட்டிக் கொண்டு போய் விட்டார். அவர் சற்று தூரம் சென்றவுடன் அவரது எண்ணற்ற படை தூசியைக் கிளப்பியவாறு வந்து அவருடன் சேர்ந்தது. அவர் அந்தப் படையுடன் எதிரிப்படையை எதிர்க்க ஆரம்பித்தார். எதிரிப் படையானது ஆயதங்கள் மற்றும் சீருடை அணிந்து அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதை எதிர்ப்பது அவருக்கு கஷ்டமாகத் தெரிந்தது. இருவரும் சண்டையிட எந்த ஒப்புமையும் இல்லாமல் தெரிந்தது. கனவிலேயே இவருக்கு யாரோ ஒருவர் மயில் குறைவாகவா அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது இந்த போர் வீரர்கள் அலங்கரிக்கப்பட்டிருக்கிறார்கள். மயில் கூட அழகாக அலங்கரிக்கப் பட்டிருக்கிறது. அது துப்பாக்கிச் சப்தத்தைக் கேட்டதும் உடனே ஓடி விடும். அது குகைக்குள் சென்று ஒளிந்து கொள்ளும். இவ்வாறே எதிரிகளின் படையும் ஓடிவிடும் என்று கூறுகிறார். பின்னர் எனது கண்கள் திறந்தன என்று கூறுகிறார். எனவே உண்மையான சக்தி என்பது இறை உதவியும் அவனது அருளுமேயாகும். வெளிப்படையான ஆடம்பரம் என்பது ஒன்றுமே இல்லை. இறைவனின் உதவியாலும் அவனது விருப்பத்தாலும் துஆவாலும் முடியக் கூடிய காரியம் வெளிப்படையான ஆடம்பரத்தால் முடிவதில்லை. ஆம்! ஒவ்வொரு வேலைக்கும் ஒரு குறிப்பிட்ட நேரம் உண்டு. அந்த நேரம் வந்ததும் இறைவன் அதை நிறைவேற்றிக் காட்டுகிறான்.

**ஹஸ்ரத் மியான் இமாமுத்தீன் சாஹிப்** சேக்குவாணி 1889 ஆம் ஆண்டு நவம்பர் 23ம் தேதி இவர்கள் பைஅத் செய்தார்கள். இவர்கள் தமது சிறிய கனவைக் கூறுகின்றார்கள். நான் கண்டா என்ற இடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனியாக இருக்கும் போது கொஞ்சம் பணம் கொடுத்தேன். அது 20

ரூபாய்க்கு இரண்டு மூன்று ரூபாய் குறைவாக இருந்தது. அதைப் பார்த்ததும் சிரித்தார்கள். இது என்ன பணம்? என்றார்கள். ஹுஸுர் நான் கனவு கண்டேன். அதில் இவ்வளவு தொகையை தங்களுக்குக் கொடுப்பதாகக் கண்டேன். எனவே கனவைப் பூர்த்தி செய்கின்றேன் என்றேன். ஹுஸுர் அதை ஏற்றுக் கொண்டார்கள்.

**ஹஸ்ரத் அமீர் கான் சாஹிப் கூறுகின்றார்கள்:** இவர்கள் 1903 ஆம் ஆண்டு பைஅத் செய்தார்கள். எனது அண்ணன் சவுத்ரி அதா முஹம்மது கான் சாஹிப் அவர்களுக்கு ஒரு நிலம் சம்பந்தமாக வழக்கு இருந்தது. நான் ஜனவரி 21, 1913 ஆம் ஆண்டு கனவு கண்டேன். அவர்களின் மனைவி அந்நியருடன் திருமணம் செய்கிறார். இதன்படி அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த சொத்தும் கையை விட்டுப் போய் விட்டது. ஆக கனவுகளுக்கு பல்வேறு பொருள் இருக்கின்றன. சில நேரம் சிலர் கனவு கண்டவுடன் பிறர் மீது பழிசுமத்தி விடுகின்றனர். இங்கு மனைவி பிறரை திருமணம் செய்வது போல் கனவு கண்டார்கள். இதன்படி சொத்து தொடர்பான வழக்கில் தோல்வி அடைந்தார்.

**ஹஸ்ரத் அமீர் கான் சாஹிப் கூறுகின்றார்கள்:** இவர் 1903 ஆம் ஆண்டு பைஅத் செய்தவர் ஆவார். ஏற்கனவே அறிவிப்பு செய்தவர் தான் இவர். கனவுகளைப் பற்றிய பல அறிவிப்புகளை இவர் செய்துள்ளார். இவர் கூறுகிறார். டிசம்பர் 18, 1912 அன்று இரவு நான் கனவு கண்டேன். எனது வீட்டில் பையன் பிறந்துள்ளான். அவனை எனது நெஞ்சோடு அணைத்துக் கொண்டு ஸலவாத் ஓதுகிறேன். இனிப்பு விநியோகம் செய்கிறேன். அவன் அழகாக இருக்கிறான். ஆனால் மெலிந்தும் பலவீனமாகவும் இருக்கிறான். எனவே பிப்ரவரி 15, 1913 அன்று அல்லாஹ் எனக்கு ஒரு மகன் வழங்கினான். அவனுக்கு ஹஸ்ரத் முதல் கலீபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அப்துல்லாஹ் கான் என்று பெயர் சூட்டினார்கள். இப்போது 1938 ஆம் ஆண்டு அதாவது அவனுக்கு 24 வயது வரை அந்த பலவீனம் இன்னும் தொடர்ந்து இருந்து வருகிறது.

**அமீர் கான் சாஹிப்** இன்னொரு கனவைக் கூறுகிறார்: நவம்பர் 24, 1913 ஆம் தேதி இரவு கனவில் ஒரு இந்துமதத் துறவி காட்டப்பட்டார். அவருக்கு குஷ்டரோகம் இருந்தது. ஆனால் அவ்வாறிருந்தும் அவரது உடல் மிகவும் வலிமையாக உள்ளது. அவர் தனது உடல் வலிமையை இளைஞர்களுக்குக் காட்டி துறவறம் அல்லது தனித்து வாழ்தல் ஆகியவற்றைப் போதித்து வந்தார். பித்தளையில் சாயத்தைத் தடவி அதை தங்கம் என்று கூறி வந்தார். அவர் தனது கனவைத் தொடர்ந்து கூறுகிறார்: நான் அந்தத் துறவியிடம் நீர் என் கண் முன்னால் தங்கத்தை உருவாக்கிக் காட்டுவீராக என்று கூறுகிறேன். நான் இவ்வாறு கூறியதும் அவர் சற்று தயங்கினார். ஆனால் ஆணவம் கொண்டு தங்கம் செய்ய ஆரம்பித்தார். நான் அவரிடம் இப்போது உமது திறமையை நான் வெளிப்படுத்துகிறேன். அதாவது அதை நெருப்பில் போட்டு சுட்டு அதில் சுத்தியலை வைத்து அடிக்கிறேன். இதனால் அதன் உண்மை உடனே தெரிந்து விடும் என்றேன். உடனே அந்தத் துறவி வெட்கப்பட்டு நீங்கள் அவ்வாறு செய்யாதீர்கள். எனது திரை விலகிவிடும் என்றார்.

அதன் பிறகு நான் அந்தத் துறவியின் சீடர்களுக்கு தப்லீக் செய்ய ஆரம்பித்தேன். அதாவது அவர் அவர்களை எந்த வழியில் கொண்டு செல்ல விரும்பினாரோ அதிலிருந்து அவர்களை விலக்குவதற்காக இஸ்லாத்தின் உண்மையான போதனையை அவர்களுக்கு வழங்கினேன். இதனால் மனிதனின் கடமைகள் என்ன என்பதை எடுத்துக் கூறினேன். அதை அந்தத் துறவியும் மிகவும் கவனமாகக் கேட்டு வந்தார். அந்தத் துறவியின் சீடர்களிடம் நல்ல விளைவை அது ஏற்படுத்தியது. அவர்கள் எங்களுக்கும் மிர்ஸா சாஹிபின் புத்தகங்களை கண்டிப்பாக வாசித்துக் காட்டுங்கள் என்கிறார்கள். அதன் பிறகு நான் மீண்டும் அந்தத் துறவியைப் பார்த்து, இறைவன் மனிதனிடம் சில சக்திகளை வைத்துள்ளான். அவற்றை மனிதன் சரியாகப் பயன்படுத்தாமல் இருந்தால் பிறகு இழப்பைப் பெறுவான். உதாரணமாக இறைவன் மனிதனிடத்து கருணை காட்டும் ஒரு திறனை வைத்துள்ளான். அநீதியிழைக்கப்பட்ட ஒருவர் நீதிமன்றத்தில் வந்து அநீதியிழைத்தவருக்கு தண்டனை வாங்கித்தர விரும்பினால் அப்போது யாருக்கும் தண்டனை வாங்கித் தருவது கருணையாகாது என்று வாதம் புரிந்தால் இது சரியாகுமா? ஒருபோதும் சரியல்ல. அநீதியிழைத்தவருக்கு எப்படியிருப்பினும் தண்டனை பெற்றுத் தர வேண்டும். அவருக்காக எந்த கருணையும் காட்டக் கூடாது.

பிறகு தொடர்ந்து கூறுகின்றார்கள்: இறைவன் மனிதனுக்கு கண்களை வழங்கியுள்ளான். அதை ஒருவர் பயன்படுத்தாமல் இருந்தால் பெரும் இழப்பை அடைவார். ஒரு விவசாயி தன் கண்களைக் கட்டிக் கொண்டு விவசாயப் பணிகளைச் செய்யாமல் இருந்தால் அவர் என்ன பயனை அடைய முடியும்? எனது இந்த

உதாரணத்தைக் கேட்டதும் அந்த துறவியை நம்பக் கூடியவர்களின் விவசாயிகள், இறைவன் மனிதனிடத்தில் பிள்ளைகள் பெறுவதற்கான சக்தியை வைத்துள்ளான். அதை பயன்படுத்தவில்லை என்றால், அழகான, அன்பான குழந்தைகள் எங்கிருந்து கிடைக்கும்? என்றனர். அதன் பிறகு நான் துறவியின் சீடர்களை நோக்கி உங்களுக்கு உபதேசம் கூறும் இந்தத் துறவியின் பெற்றோர்கள் சேராமல் இருந்திருந்தால் இவர் எங்கிருந்து பிறந்திருப்பார்? என்று கேட்டேன். இந்த ஆதாரத்தைக் கேட்டதும் நல்ல விளைவுக்கு ஆளானார். அவர் கூறினார்: முந்தைய மக்கள் இந்த வழிமுறையை நல்லதாகக் கருதினர். இந்த ஆதாரங்களை யாரும் கவனிக்கவில்லை. ஆனால் மிர்ஸா சாஹிப் எல்லா விதமான பொய்யையும் எதிர்த்து விட்டார்கள். அனைத்தையும் மிகத் தெளிவாக எடுத்துரைத்து விட்டார்கள். பிறகு நான் இந்த வழிமுறையை கால்நடைகளில் ஏற்படுத்தினால் சவாரி செய்வதற்கு விலங்கும், பால் தரும் விலங்குகளும், விவசாயத்திற்கு பயன்படும் விலங்குகளும் எங்கிருந்து வரும்?

இவ்வாறு படைப்பினங்கள் படைக்கப்பட்டதன் நோக்கம் வமா கலக்துல் ஜின்ன வல் இன்ஸ என்பது அழிந்து விடும். நபிமார்களின் வருகையின் தொடரும் முடிந்து விடும். அவர்களின் மூலமே மக்கள் இரட்சிப்பைப் பெற முடியும். நான் இதை கூறியவுடன் கனவிலேயே இவர் பார்க்கிறார். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தர்ஸ் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தம்மை சுட்டிக்காட்டி நீங்கள் என்னிடமிருந்து அறிவு மற்றும் மார்க்கத்தின் நுட்பமான கருத்துக்களைக் கேட்கிறீர்கள். துறவற வாழ்க்கையில் இந்த சந்தர்ப்பம் எப்போது கிடைக்கும்? என்று கேட்கிறார்கள். துறவறத்தை மேற்கொள்பவர்கள் தம்மை நன்மையின் உயர்ந்த அந்தஸ்த்தை அடைந்து விட்டதாகக் கருதுவர். எனவே கனவில் அல்லாஹ் அவர்களுக்கு இதைக் காட்டினான். கண்விழித்த பின் அவர் கூறுகின்றார்: எனது இந்தக் கனவின் பொருள் புரிந்தது. பாருங்கள்! அந்த துறவிக்கு குஷ்டரோகம் இருந்தது. அதுவும் காரணமின்றி மனித இயல்புக்கு புறம்பாக நடந்ததன் விளைவாக வந்ததாகும்.

இவ்வாறே இறைவனின் நியதிக்கு புறம்பாக, மனித இயல்புக்கு விரோதமாக செயல்பட்டால், அல்லது சில அமைப்புகள் இன்றைய நாட்களில் உருவாகியுள்ளன. சில நாடாளுமன்றங்கள் இதற்காக சட்டம் இயற்ற ஆரம்பித்து விட்டது. பிறகு இறைவனின் சட்டமும் செயல்படுகிறது. அது செயல்பட்டு சமுதாயங்களின் அழிவுக்குக் காரணமாக அமைகிறது. எனவே இன்றைய நாட்களில் தற்போது உலகில் பல நாடுகளில் பரவியுள்ள அஹ்மதிகளுக்கு எதிராக இந்த உலவாதிகள் மனித இயல்புக்கு புறம்பானதையெல்லாம் தமது சட்டத்தின் அங்கமாக ஆக்குவதற்கு முயற்சி செய்கின்றனர். அவ்வாறு ஆகாமல் இருக்க நாம் அதிகமாக இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும்.

<u>**ஹஸ்ரத் அப்துல்லாஹ் சாஹிபின் மகன் ஹஸ்ரத் அப்துஸ் ஸத்தார் சாஹிப்.**</u> இவர் 1892 ஆம் ஆண்டு பைஅத் செய்தவர் ஆவார். இவர் கூறுகிறார்: எனது மனைவி ஒரு கனவைக் கூறினார். எனக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இரண்டு ரூபாய் கொடுப்பதாக கனவில் பார்த்தேன். வழக்கு வெற்றி அடைந்ததும் ஹஸ்ரத் சாஹிப் எனக்கு இரண்டு ரூபாயை வழங்கினார்கள். இவ்வாறு அந்தக் கனவு நிறைவேறியது. நான் அந்த இரண்டு ரூபாயை எனது மனைவியிடம் கொடுத்து கனவை நிறைவு செய்து விட்டேன்.

<u>**ஹஸ்ரத் அமீர் கான் சாஹிப்**</u> அவர்களின் ஓர் அறிவிப்பில் அவர் கூறுகின்றார்கள்: ஜுன் 1, 1905 ஆம் ஆண்டு நான் கனவில் கண்டேன். நான் மிகவும் சுத்தமான தண்ணீரில் மீன் பிடிக்கத் தொடங்கினேன். அப்போது ஒரு புயல் வீசியது. அது கொஞ்சம் குறைந்ததும் நிலநடுக்கத்தால் பூமி அதிர ஆரம்பித்தது. பூமி அதிர்வதைப் பார்த்ததும் நான் ஸஜ்தாவில் தலையைக் குனிந்து கொண்டேன். ஸஜ்தாவில் யா ஹய்யு, யா கய்யூம் பி ரஹ்மதிக்க அஸ்தகீஸ் என்ற துஆவை ஓதுகிறேன். அப்போது இன்னொரு நிலநடுக்கம் வந்தது. அப்போது மக்கள் இது சின்ன பூகம்பம் தான். கடுமையான நிலநடுக்கம் வரவில்லையே! என்கின்றனர். இதை மக்கள் கூற ஆரம்பித்ததும் எனது உள்ளத்தில் இன்னும் ஸஜ்தாவிலேயே இரு நிலநடுக்கம் வருகிறது என்று போடப்பட்டது. அதன் பிறகு கடுமையான அழிவை ஏற்படுத்திய மிகவும் பயங்கரமான நிலநடுக்கம் வந்தது.

இது ஜுன் 1905 ஆம் ஆண்டு அவர் கண்ட கனவாகும். இது காங்கடாவில் வந்த பூகம்பம் ஏப்ரலில் வந்தது. அதன் பிறகு பல நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே இது வருங்காலத்தில் வரவுள்ள நிலநடுக்கங்கள் பற்றிய முன்னறிவிப்பாகவும் இருக்கலாம். இது உலகப் போரையும் சுட்டிக்காட்டுவதாக இருக்கலாம். எவ்வாறிருப்பினும், ஒரு நிலநடுக்கத்தைப் பார்த்து அல்லது ஓர் அழிவைப் பார்த்து மனிதன் கவனமற்றவனாக ஆகிவிடக் கூடாது. எப்போதும் அல்லாஹ்வின் முன்பாக தலைகுனிந்தவாறு இருக்க வேண்டும். அவனுடனே

எப்போதும் நேசம் கொண்டிருக்க வேண்டும். இந்த இறுதி காலகட்டத்தில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலகட்டத்தில் அதிகமாக நிலநடுக்கம் மற்றும் பேரழிவு ஆகியவற்றிற்கான மிக அதிகமான முன்னறிவிப்பு காணப்படுகிறது. எனவே நாம் அல்லாஹ்வின் முன் எப்போதும் குனிந்தே இருக்க வேண்டும். கவனமற்று இருந்து விடக் கூடாது.

**ஹஸ்ரத் அமீர் கான் சாஹிப்** கூறுகின்றார்கள்: 29 மே, 1905 அன்று நான் கனவு கண்டேன். மழை மற்றும் புயல் வீசுகிறது. அதைக் கண்டு மக்கள் ஒரு மரத்தின் கீழிருந்து மைதானத்தை நோக்கிப் போகிறார்கள். இந்த மரம் நம்மை நசுக்கி விடக் கூடாதே என்ற எண்ணத்தில் போகிறார்கள். ஆனால் ஏழை மற்றும் வறியவர்கள் மரத்தின் நிழலையே பெரிதாகக் கருதினர். மைதானத்திலிருந்து மரத்தின் கீழே ஓடி வந்து நின்றதன் விளைவாக பாதுகாப்புப் பெறுகின்றனர். அவர்கள் வந்ததும் புயலால் மைதானத்தில் இருந்தவர்கள் அழிந்து விட்டனர். இதைப் பார்த்ததும் எனது நாவில் இந்த வார்த்தைகள் வந்தன. இவ்வாறான முடிவை அடைந்தவர் அழிந்து விட்டனர். பொதுவாக செல்வந்தர்களை விட ஏழைகள் தான் பெரும்பாலும் நபிமார்களை ஏற்றுக் கொள்பவர்களாக உள்ளனர்.

**ஹஸ்ரத் அமீர் கான் சாஹிப்** கூறுகின்றார்கள்: ஜுன் 25, 1905 –ல் நான் ஒரு கனவில் ஹஸ்ரானாவில் உள்ள எனது வீட்டில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இபாதத் செய்வதாகக் கண்டேன். அவர்கள் இபாதத் செய்து முடித்தவுடன் ஹுஸூர் குதிரையில் ஏறிச் சென்றார்கள். கொஞ்ச தூரம் சென்றதும் மவ்லவி சாஹிப் அதாவது முதல் கலீஃபாவிடம் அவர்களும் விரைவாக தயாராக வேண்டும் என்று கூறி இந்தக் கடிதத்தை மவ்லவி சாஹிபிடம் கொடுப்பதற்கு யாராவது இருக்கிறாரா? என்று கேட்டார்கள். அப்போது அந்தக் கடிதத்தில் பணம் அல்லது நகையையும் உடன் எடுத்துக் கொள்ளுங்கள் என்று எழுதப்பட்டிருந்தது. அவ்வாறு நான் ஹுஸூர் நான் உள்ளேன் என்று கூறினேன். ஹுஸூரிடம் அந்தக் கடிதத்தை வாங்கி உடனே ஹஸ்ரத் மவ்லவி சாஹிபிடம் கொண்டு போய் சேர்த்தேன். நாங்கள் மக்காவை சென்றடைந்ததும் அங்கு சின்னச் சின்ன மலைக் குன்றுகள் தென்பட்டன. அதில் கல், சரள் மற்றும் சுண்ணாம்பு ஆகியவை இருந்தன. அந்த கல்களுக்கு மத்தியில் சுத்தமான தண்ணீரின் சின்னச் சின்ன ஓடைகள் இருந்தன. இதைப் பார்த்ததும் இது அனைத்தும் இறைவனின் அருளாகும். அது தண்ணீரைப் போன்று இவ்வாறு ஓடிக் கொண்டிருக்கிறது என்ற எண்ணம் ஏற்பட்டது. இந்த ஓடைகள் நிலநடுக்கத்தால் அழிந்து விட்டால் இந்தத் தண்ணீரும் கலங்கிவிடும் என்று நினைக்கிறேன்.

இதன் உண்மை விளக்கம் என்னவென்பதை அல்லாஹ்வே நன்கறிவான். ஆனால் இதில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரின் அடியார்கள் மக்காவிலிருந்து மீண்டும் இஸ்லாத்தின் உண்மையான தூய மற்றும் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும் போதனைகளின் மூலம் உலகையும் தூய்மைப்படுத்த முயற்சி செய்வர். கிலாஃபத் அமைப்பின் கீழ் இந்த முயற்சி தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும். சமுதாயங்கள் இதிலிருந்து தண்ணீர் குடிக்கும். இதனால் அவர்கள் பலன் பெற்று வருவர் இன்சா அல்லாஹ்.

**ஹஸ்ரத் அமீர் கான் சாஹிப்** கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹின் மரணத்திற்குச் சில நாட்களுக்கு முன் நான் கனவில் சூரிய கிரகணத்தைக் கண்டேன். அவர்களின் வஃபாத் என்பது இதன் பொருளாகும் என்று தெரிந்து கொண்டேன். பிறகு இவர்கள் எழுதுகிறார்கள்: 12, 13 ஜனவரி 1938–ன் நடு இரவில் நான் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களை சில நண்பர்களோடு துஆ செய்வதாகக் கண்டேன். அவர்கள் அன்னாரின் பாதுகாப்பிற்காக காலில் செருப்பு அணியாமல் இருக்கிறார்கள். சவுத்ரி ஃபதஹ் முஹம்மது சாஹிப் அவர்களுடன் உள்ளனர். எனவே ஜனவரி 13 அவர்கள் முபாரக் பள்ளிவாசலில் சில நண்பர்களுடன் மிர்ஸா அஸீஸ் அஹ்மது சாஹிபின் மகன் தொடர்பாக துஆ செய்தார்கள். துஆ செய்வதற்கு முன்னதாக இவ்வாறு துஆ செய்வதன் அறிவிப்பை மஸ்ஜித் முபாரக்கில் செய்தார்கள்.

பிறகு இவர்கள் எழுதுகிறார்கள்: 1912 ஆம் ஆண்டு செப்டம்பரில் நான் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களை தமது இன்னும் சில மக்களுடன் கனவில் பார்த்தேன். ஹுஸூர் இவ்வாறு கூறுகிறார்கள். காஃபிர்கள் நபி கரீம் (ஸல்) அவர்கள் மீது தீய பேச்சுக்களைப் பேசுவதில் எல்லை மீறும் போது அதை சகித்துக் கொண்டு நம்மால் இருக்க முடியாது. காஃபிர்கள் தீயவற்றைப் பேசுவதற்கு முன்பாகவே அவர்கள் அழிந்து விட வேண்டும் என்று விரும்புகிறோம் என்றார்கள். இந்தக் கனவை நான் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் கூறினேன். அதற்கு அவர்கள் இது மிகவும் அருளுக்குரிய கனவாகும் என்றார்கள்.

பிறகு எழுதுகிறார்கள்: பிப்ரவரி 20, 1913 அன்று நான் இரவில் கனவு கண்டேன். அதில் காலித் பின் வலீத், ஸரார் பின் அஸ்வத் ஆகியவர்கள் கையில் வாள் வைத்துள்ளார்கள். வெற்றி பெற்றுக் கொண்டே செல்கிறார்கள். பலர் அவர்களுக்கு முன்னால் தமது வாளை கீழே போடுகிறார்கள். யஸீதும் ஆயுதத்தை போட்டு விடுகிறான். பிறகு அவர்களுடன் சேர்ந்து விடுகிறான்.

**ஹஸ்ரத் மிர்ஸா முஹம்மது அஃப்ஸல் சாஹிப்** மிர்ஸா முஹம்மது ஜலாலுத்தீன் சாஹிபின் மகன் ஜிஹ்லம் பயணம் தொடர்பாக கூறுகின்றார்கள்:

இவர் 1895 ஆம் ஆண்டு பைஅத் செய்தவர் ஆவார். இவர் கூறுகிறார்: 1903 ஆம் ஆண்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜிஹ்லமிற்கு வந்தார்கள். நானும் அங்கு சென்றேன். திறளான கூட்டம் இருந்தது. சிலர் கேட்ட கேள்விக்கு ஹுஸுர் கூறினார்கள். இது இறைவனின் ஒளியாகும். அதாவது ஜமாஅத் அல்லாஹ்வின் ஒளியாகும். இதை மக்கள் அனைத்து விட நாடினாலும் முடியாது. ஹஸ்ரத் சாஹிப் ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் சஹீது அவர்களும் இந்தப் பயணத்தில் உடன் இருந்தார்கள். அவர்கள் கூறினார்கள். இறைவன் என்னை மூன்று முறை தலையை கொடுக்குமாறு கூறியுள்ளான்.

பிறகு **அமீர் கான் சாஹிப்** எழுதுகிறார்கள்: டிசம்பர் 6, 1906 அன்று நான் கனவில் கண்டேன். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கையில் ஒரு தடி இருக்கிறது. ஒரு காவி நிற எருமை மாடு அவர்களை முட்டுவதற்காக வேகமாக ஓடி வருகிறது. ஆனால் தடியின் அச்சத்தால் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களை நோக்கி வந்ததும், அது பின்னால் விலகிச் செல்கிறது. இறுதியில் அவர்கள் ஓரிடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அங்கு அச்சு செய்பவர் தனது கடையில் உட்கார்ந்திருந்தார். இன்னொரு நபர் கிலாஃபத்தின் போலி அச்சு செய்வதற்காக வந்துள்ளார். அவர் அந்தக் கடையில் இருக்கும் போது ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அங்கு வந்தார்கள். கடைக்காரர் மவ்லவி நூருத்தீன் சாஹிப் இங்கேயா இருக்கிறார்கள்? என்று கேட்டார். நான் ஆம் என்றேன். உடனே அந்தக் கடைக்காரர் அச்சு செய்ய வந்த நபரை பிடித்து விட்டார். அப்போது முதல் கலீஃபா (ரலி) அவர்கள் ஒரு மாளிகைக்குகள் சென்று விட்டார்கள். நானும் அவர்களுடன் இருந்தேன். அந்த வீட்டின் சொந்தக்காரர் மிகவும் அழகானவர். மிகவும் செல்வாக்கு படைத்தவர். நல்ல உள்ளம் கொண்டவர் ஆவார். அவர் ஹஸ்ரத் சாஹிபிற்கு மிகவும் மரியாதை செலுத்தினார். உணவு வழங்கினார். ஹுஸுர் அந்த வீட்டை விட்டு மீண்டும் வெளியே வந்த போது எண்ணற்ற மக்களின் கூட்டம் இருந்தது. போலியான முத்திரை செய்ய வந்தவர் கூட்டத்திற்குள் நுழைந்து ஓடுகிறான். மிக அதிகமாக தேடியும் அவன் எங்கும் கிடைக்கவில்லை. கனவில் பறந்து சென்று பார்த்தும் எங்கும் கிடைக்கவில்லை.

இவர் கூறுகிறார்: நான் இந்தக் கனவை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் கூறினேன். அதற்கு அவர்கள் விளக்கம் தந்தார்கள். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் நீண்ட காலம் நோய்வாய்ப்பட்டிருக்கும் போது நல்ல சுற்றுச்சூழல் மாற்றம் வேண்டும் என்பதற்காக ஹஸ்ரத் நவாப் கான் சாஹிபின் வீட்டிற்கு வந்ததும் அப்போது மவ்லவி முஹம்மது அலி சாஹிப் முதல் கலீஃபா உயிருடன் இருக்கும் போதே கிலாஃபத்திற்கு எதிராக பிரசுரம் வெளியிட்டது, பிறகு ஹுஸுர் அவர்களின் ஜனாஸாவிற்காக வந்த எண்ணற்ற கூட்டம் பிறகு முஹம்மது அலி சாஹிப் காதியானை விட்டு வெளியேறியது ஆகியவற்றால் கனவு நிறைவேறி விட்டது என்று கூறினார்கள்.

பிறகு கூறுகின்றார்கள்: மார்ச் 13, 1914 அன்று கனவில் ஒரு தேன் அடையைக் கண்டேன். அதிலிருந்து தேன் வழிந்து கொண்டிருந்தது. அதை நாங்கள் அனைவரும் பாத்திரத்தில் இடுகிறோம். அதன் பிறகு ஹஸ்ரத் முதல் கலீஃபா அவர்கள் எனது ஜனாஸாவை மவ்லவி சேர் அலி சாஹிப் குளிப்பாட்ட வேண்டும். இவர் எனது சகோதரரும் நல்லவரும் ஆவார் என்று கூறினார்கள். நான் எனது இந்தக் கனவை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கு உடனடியாகத் தெரியப்படுத்தினேன். இது முதல் கிலாஃபத்திற்கும் இரண்டாவது கிலாஃபத்திற்கும் இடைப்பட்ட நெருங்கிய காலத்தின் சம்பவமாகும். மவ்லவி சேர் அலி சாஹிப் தான் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் ஜனாஸாவை குளிப்பாட்டினார்கள். எனது கனவின் காரணமாகத்தான் அவ்வாறு அனுமதி வழங்கினார்களா என்று என்னால் உறுதியாக கூற முடியாது. ஆனால் மவ்லவி சேர் அலி சாஹிப் தான் ஜனாஸாவை குளிப்பாட்டினார்கள்.

**முஸ்தகீம் சாஹிபின் மகன் சாகர் தீன் சாஹிப்** 1906 ஆம் ஆண்டு பைஅத் செய்தார்கள். இவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவனடி சேர்ந்த பிறகு முதல் கிலாஃபத் ஆரம்பமானது. இறைவன் இந்த கிலாஃபத்தின் மூலம் என் மீது வழங்கியவை யாதெனில் ஒரு நாள் கனவில் கண்டேன். மிகவும் அழகான அரச குதிரை ஒன்று கட்டப்பட்டிருந்தது. அது கோதுமை நிறத்தில் இருந்தது. அந்த குதிரைக்கு அருகில் ஒரு கட்டில் இருக்கிறது. அதில் படுக்கை போடப்பட்டுள்ளது. தலையணையும் போடப்பட்டுள்ளது. கனவில் புயல் காற்று வீசியது போல் தெரிந்தது. அந்தப் புயல் கோடை காலத்தில் வீசும் புயல்காற்று போல் இருந்தது. பொதுவாக கோடை காலத்தில் இரவுப் பொழுதில் வீசும் புயல் காற்று போல் வீசியது. இந்தியா, பாகிஸ்தானில் வசிப்பவர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்போது அந்தப் படுக்கையில் தூசி, மண் ஆகியவை படிந்து விடுகிறது. அதை நான் சுத்தம் செய்கிறேன். அந்தப் படுக்கை ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் படுக்கை என்று எண்ணுகிறேன். இந்த எல்லா கனவையும் நான் ஹஸ்ரத் முதல் கலீஃபாவுக்கு எழுதி அனுப்பினேன். அதற்கு அவர்கள் இவ்வாறு விளக்கம் தந்தார்கள். அதாவது நமக்கு கிடைத்த எல்லாவற்றிலிருந்தும் உமக்கும் பங்கு கிடைத்து விட்டது.

**ஹஸ்ரத் அல்லாஹ் தத்தா சாஹிப்** தலைமையாசிரியர் மியான் அப்துஸ் ஸத்தார் சாஹிப் அவர்களின் மகன் கூறுகின்றார்கள்:

இவர்கள் 1998 ஆம் ஆண்டு பைஅத் செய்தார்கள். இவர் கூறுகின்றார்: ஹஸ்ரத் முதல் கலீஃபா (ரலி) அவர்களின் காலகட்டத்தில் எனக்கு மிகவும் அழகான காட்சி கனவில் காட்டப்பட்டது. அது எனது வாழ்வின் பல்வேறு நிலைகளின் முன்னறிவிப்பாகும். அதாவது ஹஜ் நாளின் போது தஹஜ்ஜுத் நேரத்தில் பார்த்தேன். இரண்டு நபர்கள் பேசிக் கொண்டிருக்கின்றனர். ஒருவர் இங்கிருந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தோழர்களின் உருவம் தெரிகிறது என்று கேள்விப்பட்டுள்ளேன் என்கிறார். மற்றவர் ஆம்! ஜிஹ்லமிலிருந்து பார்க்கும் போது தெரிகிறது என்றார். பிறகு அவர் இதோ பார் என்கிறார். அது கண்ணாடியால் செய்யப்பட்ட ஒரு வீடாகும். அதன் கண்ணாடி கருப்பாக இருந்தது. அது திடீரென்று புர்ராக் ஆக மாறி விட்டது. அதற்குள் நபி (ஸல்) அவர்களின் 4 சஹாபாக்கள் நாற்காலியில் அமர்ந்திருக்கிறார்கள். அதாவது 4 கலீஃபாக்களும் உள்ளனர். பிறகு அந்தக் காட்சி விலகி ஹஸ்ரத் உஸ்மான் தெரிந்தார்கள். பிறகு அந்தக் காட்சியும் மறைந்து ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் தென்பட்டார்கள். இந்த காட்சியை நான் மனம் நிறையும் வரை மிகவும் நன்றாகப் பார்த்தேன். ஹஸ்ரத் ஸித்தீக் தமது முகத்தை நன்றாக எனக்கு காட்டினார்கள். அது ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் வடிவமாக இருந்தது. இது கலீஃபத்துல் மஸீஹ் ஆவார்களே! என்ற எண்ணம் எனக்கு தோன்றியது. அப்போது அபூபக்கர் நூருத்தீனுடைய உருவத்தில் இருக்கிறார் என்று இல்ஹாம் இறங்கியது. நூருத்தீனைப் பார்க்காத வரை சஹாபாக்கள் மரணிக்க மாட்டார்கள். நான் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கு இதை எழுதி அனுப்பினேன். ஹுஸூர் பதில் கூறினார்கள். இது நற்செய்தி அடங்கிய உண்மையான கனவாகும். எனக்கும் பல்வேறு சமயங்களில் இவ்வாறு நற்செய்தி கிடைத்துக் கொண்டிருந்தது. இதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு இல்ஹாம் இருந்தது.

நமது அன்பின் வீட்டில் வசிப்பவர்களுக்கு அமைதியும் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது.

பிறகு கூறுகிறார்கள்: எனக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கவிதை வரிகளும் இல்ஹாம் மூலம் இறங்கியது.

இலையுதிர் காலம் சென்றடைந்து விட்டது. இப்போது கனிதரும் காலம் வந்து விட்டது. இறைவனின் தூய அடியார்களுக்கு இறைவனின் உதவி கிடைக்கிறது. அந்த உதவி வரும் போது உலகிற்கு ஓர் புதிய உலகை காட்டி விடுகிறது.

அந்த காலத்திலிருந்தே அல்லாஹ் ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கான நற்செய்தியை சஹாபாக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறான். பிறகு இந்த சஹாபி நான் பல கனவுகளைக் கண்டுள்ளேன் என்று கூறுகிறார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் எனக்கு நெய்சோறு வழங்கினார்கள். ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் எனக்கு அல்வா கொடுத்து அதை விளம்பும்படி கூறினார்கள். நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு பின்னாலும் அவர்களுடன் சேர்ந்தும் தொழுதிருக்கிறேன். ஹுஸூருக்கு தண்ணீர்

கொடுத்திருக்கிறேன். ஹுஸுர் ஒரு மலைக்குன்றின் மீது நிற்கிறார்கள். நான் பள்ளத்தில் இருந்தேன். ஹுஸுர் எனது கையைப் பிடித்து மேலே தூக்கி தம்முடன் என்னையும் நிற்க வைத்தார்கள். அவ்வாறே ஒருமுறை ஹுஸுர் பூக்களை சேகரித்துக் கொண்டிருந்தார்கள். நானும் பறித்து ஹுஸுருக்குக் கொடுக்கிறேன்.

அவர் கூறுகிறார்: நான் ஹஜ் செய்தேன். மக்கா சென்ற போது கஃபாவை வலம் வந்தேன். அதன் பிறகு கனிகளால் நிறைந்த மரங்கள் பைத்துல்லாஹ்வில் உருவானது. மாம்பழம், பேரிச்சம்பழம் போன்ற மரங்கள் அங்கு இருந்தன. இவ்வாறு கனவில் கண்டேன். மேலும் எனது சோதனையின் காலம் நிறைவடைவதற்கான நற்செய்தியும் எனக்குக் கிடைத்தது. தூய நல்லடியார்களும் என்னைக் குறித்து நற்செய்தி வழங்கியுள்ளனர்.

**ஹஸ்ரத் மவ்லானா குலாம் ரஸுல் சாஹிப்** ராஜிக்கி 11 மே 1936 அன்று கடைசி நஃபில் நோன்பின் தஹஜ்ஜுத் வேளையில் கனவு கண்டார்கள். வைஸ்ராய் காதியானுக்கு வந்திருக்கிறார். சந்திக்க வந்த அனைவரையும் விட நான் அஹ்மதிகளை முன்னிறுத்துகிறேன். அதாவது இவர்கள் தான் சந்திக்க வைக்கிறார்கள். நானும் மவ்லானாவும் சேர்ந்து நிற்கிறோம். மவ்லானா அவரை கொலை செய்ய விரும்பும் அபாயம் இருப்பதாக வைஸ்ராய் எண்ணுகிறார். எனக்கு வைஸ்ராயுடன் நட்புறவும் நெருங்கிய தொடர்பும் உண்டு. நான் அவருக்கு வெற்றிலை கொடுத்து விட்டு மவ்லவி சாஹிபிடமிருந்து எந்த ஆபத்தும் உங்களுக்கு இல்லை என்று கூறினேன். இது குலாம் ரஸுல் சாஹிப் கண்ட கனவாகும். அவர்கள் கூறினார்கள்: இவர்கள் சார்பாக நான் பொறுப்பேற்கிறேன் என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் சேக் முஹம்மது இஸ்மாயில் சாஹிப்** சேக் மஸீதா சாஹிபின் மகன், 1894 ஆம் ஆண்டு பைஅத் செய்தவர் ஆவார். அவர்கள் கூறுகிறார்கள்:

வல்லமைமிக்க இறைவனே! உன் பெயரில் பொய் சத்தியம் செய்பவர் உன் சந்நதியில் புறக்கணிக்கப்பட்டவர் ஆகிவிடுகின்றார். நான் உனது வல்லமையின் மீது நம்பிக்கை வைக்கிறேன். நான் உன் மீது சத்தியம் செய்து கூறுகிறேன். என்னைப்போன்ற பாவம் செய்தவனும் ஒன்றுமற்றவனுமாகிய எனக்கு நீ இரகசியங்களைக் கற்பித்திருக்கிறாய். நான் உன் மீது பொய்யான சத்தியம் செய்து, பொய்யான கனவு மற்றும் இல்ஹாம்களைப் புனைந்து தூயவனாகிய உன்னிடமிருந்து வந்தது என்று கூறினால் எனக்கு தண்டனை கொடுக்கவும் நீ முழு ஆற்றல் பெற்றவனாவாய்.

இவர் தாம் கண்ட ஒரு கனவைக் கூறுகிறார்: ஒரு தோட்டம் இருக்கிறது. அதில் ஜமாஅத்தின் எல்லா நபர்களும் உள்ளனர். ஏழைகள் ஒரு பக்கமும் பணக்காரர்கள் மறுபுறமும் உள்ளனர். பணக்காரர்கள் ஹஸ்ரத் மவ்லானா அப்துல் கரீம் சாஹிப் ஸியால்கோட்டி அவர்களை தம் தலைவராக நியமிக்கிறார்கள். இந்தக் கனவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் உயிருடன் இருக்கும் போது பார்க்கிறார்கள். இந்தக் கனவு கிலாஃபத் தொடர்பானதாகும். எவ்வாறிருப்பினும் பணக்காரர்கள் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் ஸியால்கோட்டி (ரலி) அவர்களை தமது தலைவராக நியமித்தனர். எனது ஏழை சகோதரர்கள் என்னை தங்களது தலைவராக நியமித்தனர். முதல் சொற்பொழிவில் ஹஸ்ரத் ஜனாப் மவ்லானா அப்துல் கரீம் சாஹிப் ஸியால்கோட்டி (ரலி) அவர்கள் நிகழ்த்துவார்கள். அதற்கு இந்த எளியவனாகிய நான் பதில் கொடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. ஹஸ்ரத் மவ்லானா அவர்கள் தமது சொற்பொழிவை தனது கிலாஃபத்திற்கான ஆதாரங்களை எடுத்துரைத்தார்கள். ஹஸ்ரத் நூருத்தீன் சாஹிப் அவர்களின் கிலாஃபத்திற்கான ஆதாரங்களை நான் எடுத்துக் கூறி மவ்லானாவின் சொற்பொழிவுக்கு மறுப்பு கூறினேன். பிறகு மவ்லானா தமது கிலாஃபத்திற்கான ஆதாரங்களை எடுத்து வைத்தார்கள். பிறகு நான் எனது சொற்பொழிவில் ஹஸ்ரத் மவ்லானாவின் சொற்பொழிவுக்கு நான் மறுப்பு தெரிவித்து ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் (ரலி) அவர்களின் கிலாஃபத்திற்கு ஆதரவாக ஆதாரங்களை எடுத்து வைக்கிறேன். அப்போது மவ்லவி அப்துர் கரீம் (ரலி) ஒரு பாய்ச்சல் பாய்ந்தார். பிறகு இரண்டாவது முறையும் பாய்ந்து, மூன்றாவது முறையும் பாய்ந்து வந்து ஹஸ்ரத் முதல் கலீஃபாவின் முன்னிலையில் வந்து ஹஸ்ரத்! எனது பைஅத்தை பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் முதல் கலீஃபா மவ்லவி சாஹிபிடம் பைஅத் வாங்கினார்கள். பிறகு அமைதியாக தனியாக ஒரு மாமரத்தின் அடியில் சாய்ந்து உட்கார்ந்திருந்தார்கள். எனது இந்த ரூஃயாவிற்கு சாட்சி ஹாமித் அலி சாஹிப் இர்ஃபானி, மாஸ்டர் அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்கள் ஆவார். இந்தக் கனவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் வாழ்நாளில் கண்டார்கள். இவ்வாறு கிலாஃபத் பற்றிய கனவுகள் அல்லாஹ்வின் அருளால்

எப்போதுமே ஜமாஅத்தில் அல்லாஹ் காட்டிக் கொண்டு வருகிறான். இது இன்றைய சம்பவங்கள் அல்ல. சிலர் ஆட்சேபனை செய்து விடுகின்றனர். இன்று காணப்படுகின்ற கனவுகள் கலீஃபாக்களின் முந்தைய காலத்திலும் வந்தன. ஹஸ்ரத் முதல் கலீஃபா ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபா ஆகியோர்களின் காலத்திலும் கனவுகள் காட்டப்பட்டுள்ளன.

ஆக இவை நான் எடுத்துக் கூறியுள்ள சில கனவுகளாகும். அடுத்ததாக நான் கூற விரும்புவது என்னவென்றால் இன்று இப்போது செரால்யூன் மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகளில் மாநாடு நடைபெறுகிறது. செரால்யூனில் இப்போது மாநாடு நடந்து கொண்டிருக்கும். வங்காள தேசத்தில் முதல் நாள் மாநாடு முடிந்து விட்டது. வங்காள்தில் அஹ்மதிய்யத் சென்று சேர்ந்து நூறு வருடங்கள் ஆகிவிட்டன. இங்கிலாந்து ஜமாஅத்திற்கு இவ்வாண்டு நூறு ஆண்டுகள் முழுமை அடைகின்றன. எனவே நன்றி கூறும் விதமாக இதைக் கொண்டாடுவதற்கு பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கிறது. வங்காளதேசம் ஜமாஅத்தும் இதற்கான ஏற்பாட்டை செய்தார்கள். இதன்படி செயல்படவும் செய்தார்கள். இந்த நிகழ்ச்சியின் ஒரு மாபெரும் பகுதியாக இந்த மாநாடு இருந்தது; இருந்து வருகிறது. எனவே இவ்வருடம் ஒரு அரங்கு வாடகைக்கு வாங்கி அதில் மாநாடு நடத்துவதற்கான ஏற்பாட்டைச் செய்தார்கள். இதனால் எல்லா ஏற்பாடுகளும் எளிதில் நடைபெறவும், விருந்தினர்களை தங்க வைக்கவும் இங்கு சௌகரியமாக இருக்கும். பெருமளவில் மக்கள் இதில் கலந்து கொள்ள முடியும் என்பதற்காக இங்கு ஏற்பாடுகள் முழுமையாக நிறைவடைந்திருந்தது. நேற்றைய முன்தினம் சில பெயர் தாங்கிய ஆலிம்கள் தமது சீடர்களை ஒன்றுதிரட்டி, மத்ரஸாவில் பயிலும் மாணவர்களை ஒன்று திரட்டி இருப்பார்கள். மேலும் ஜமாஅத்தே இஸ்லாமியின் சில மக்களும் இருந்தனர். இவர்கள் மொத்தம் ஏறக்குறைய இரண்டு, மூன்றாயிரம் பேர் வாடகைக்கு வாங்கப்பட்டிருந்த அரங்கத்தில் நடைபெறவிருந்த மாநாட்டுத் திடலை தாக்கினர். போலீஸ் அங்கு நின்று கொண்டிருந்தது. எதுவும் செய்யவில்லை. இறுதியில் இந்தத் தீவிரவாதிகள், தாக்குதல் நடத்தியவர்கள் ஏறக்குறைய அனைத்து சாமான்களையும் எல்லா ஏற்பாட்டையும் சீர்குலைத்து விட்டார்கள். பின்னர் அதில் தீ வைத்து விட்டனர். இதனால் நாற்காலி, கூடாரம் இன்னும் இதுபோன்ற பல பொருட்கள் வாடகைக்கு வாங்கப்பட்டிருந்தன. இவை சேதமடைந்ததால் கோடிக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதுவே இஸ்லாத்தின் பெயர் தாங்கிய ஆலிம்களின் நடத்தையாகும். எவ்வாறிருப்பினும் மாநாடு இரத்து செய்யப்படவில்லை. அது நான் முன்னதாக கூறியபடி நடந்து கொண்டிருக்கிறது. இன்சா அல்லாஹ் அது நடைபெறும். ஜமாஅத்தின் சொந்த இடத்தில் இப்போது நடந்து வருகிறது. எண்ணிக்கை குறைவாக இருக்கலாம். அல்லது இடநெருக்கடி அதிகமாகலாம். எவ்வாறாயினும் வழக்கம்போல் மாநாடு நடைபெறும் இன்சா அல்லாஹ். மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இவ்வாண்டு வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் சென்றுள்ளனர். அவர்களையும் இன்னும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ள அனைவரையும் அல்லாஹ் தன் பாதுகாவலில் வைப்பானாக! மாநாடு அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் முடிவுற வேண்டும். இந்த ஆலிம்களின் தீங்கை அவர்களிடமே திருப்புவானாக! மிக அதிகமாக பொருள் சேதம் ஏற்பட்டுள்ளது. அல்லாஹ் இதையும் நிவர்த்தி செய்வானாக! எனவே அதிகமாக துஆ செய்யுங்கள்.

இரண்டாவது மாநாடு நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று செரால்யூனில் நடக்கிறது. செரால்யூனின் ஆலிம்களுக்கும் வங்காள தேசத்தின் ஆலிம்களுக்கும் மத்தியில் உள்ள வித்தியாசம் என்னவென்றால், செரால்யூனின் உலமாக்கள் நல்லெண்ணம் கொண்டவாறு வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளனர். அல்லது மாநாட்டில் கலந்து கொண்டுள்ளனர். நல்ல விருப்பங்களையும் சிறந்த உணர்வுகளையும் கொண்டு விளங்குகின்றனர். இவர்களிடம் குறைந்தபட்சம் மனித நேயம் காணப்படுகிறது. எதிர்த்த போதிலும் நமது நிகழ்ச்சிகளில் வந்து கலந்து கொள்கின்றனர். அல்லாஹ் இதற்கான நற்கூலியை இவர்களுக்கு வழங்குவானாக! இவர்களின் உள்ளங்களை இன்னும் அதிகமாக திறப்பானாக!

இவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாதங்களையும் தூதுச் செய்தியையும் புரிந்து கொள்கின்றனர். எவ்வாறிருப்பினும், செரால்யூனுக்காகவும் துஆ செய்யுங்கள். அவர்களின் மாநாடும் எல்லா விதத்திலும் வெற்றியுடனும் அருட்களுடனும் நிறைவை அடையட்டுமாக! இதில் கலந்து கொள்கின்ற அஹ்மதி மற்றும் பிற விருந்தினர்கள் அனைவரும் மாநாட்டின் அருள்களிலிருந்து பலன் பெறட்டுமாக! அல்லாஹ்வின் அருளால் செரால்யூன் ஜமாஅத்தும் மிக அதிகமான தூய்மையான பற்று கொண்டுள்ள ஜமாஅத்துகளில் ஒன்றாகும். அல்லாஹ் இவர்களின் தூய்மை மற்றும் விசுவாசத்தை இன்னும் அதிகமாக்குவானாக! விரைவாக

இந்த நாடும் முழு ஆப்பிரிக்காவும் அஹ்மதிய்யத்தின் அரவணைப்பில் வர வேண்டும். இவர்கள் அனைவரும் உண்மையான இஸ்லாமிய போதனைகளின்படி செயல்பட இவர்களுக்கு நற்பாக்கியத்தை வழங்குவானாக!

ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் சில நபர்களுக்கு ஜனாஸா காயிப் தொழுகையும் தொழ வைப்பேன். முதல் ஜனாஸா அன்பிற்குரிய கரீஃபா கோண்டே சாஹிபின் ஜனாஸாவாகும். இவர் சிரால்யூனின் ஜாமிஆ அஹ்மதிய்யாவின் மாணவன் ஆவார். இவர் ஜாமிஆவில் தரஜா ஸானியா (இரண்டாம் ஆண்டு) –வில் கல்வி பயின்று வந்தார். ஜனவரி 31 ம் தேதி இவர் வஃபாத் ஆகியுள்ளார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இங்கு மாநாடு நடக்கிறது என்று நான் முன்னதாக கூறினேன். இதற்காக ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார். குத்தாம்கள் வேலை செய்வதுண்டு. வகாரே அமல் செய்து கொண்டிருந்த போது மாடிப்படியிலிருந்து கீழே விழுந்ததால் தலையில் அடிபட்டது. உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு சிகிச்சை நடைபெற்று வந்தது. தலையில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது என்று எக்ஸ்ரே மூலம் தெரிய வந்தது. மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று அறிவுரை கூறினர். இதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அதற்கு முன்பாகவே இவர் வஃபாத் ஆகிவிட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

செரால்யூனுக்குப் பக்கத்து நாடான கைனியா என்ற நாட்டைச் சேர்ந்தவர். அங்கிருந்து ஜாமிஆவில் படிப்பதற்காக வந்திருந்தார். மிகவும் நல்லவர். தூயவர். கடினமாக உழைக்கும் மாணவராகவும் இருந்தார். இவர் தனது குடும்பத்தில் தனி அஹ்மதி ஆவார். இவர் தம்மை வக்ஃப் செய்து ஜாமிஆ அஹ்மதிய்யாவில் படிப்பதற்கான எண்ணம் கொண்ட போது வீட்டில் உள்ளவர்கள் அதிகமாக எதிர்த்தனர். ஆனால் இவர், தான் கொண்ட வாக்குறுதியில் உறுதியுடன் நிலைத்திருந்தார். கடந்த வருடம் விடுமுறையில் செரால்யூனிலிருந்து கைனியாவிற்கு சென்ற போது இவரது பெற்றோர் இவரிடம் சிறந்த மாற்றங்கள் இருப்பதைக் கண்டனர். இதன் காரணமாக இவரது பெற்றோர்களும் ஜமாஅத்தில் பைஅத் செய்தனர். இவரது தந்தையார் பெயர் ஃபாஸினா கொண்டே ஆகும். தாய் செவியூலுனு ஆவார்.

இந்த இளைஞர் மிக நல்லவர், நேர்மையானவர், இறையச்சம் உடையவர், ஜமாத்துடனும் கிலாஃபத்துடனும் எல்லையில்லா பற்று கொண்டவர். இவரிடம் எந்த பொறுப்பு ஒப்படைக்கப்பட்டாலும் தமது சக்திக்கும் அப்பாற்பட்ட அதை நிறைவேற்ற முயற்சி செய்வார். இவருடைய நண்பர் கூறுகிறார். இவர் எப்போதும் தமக்காக துஆ செய்யுமாறு பிறரிடம் கூறுவார். எனக்கு எப்போது மரணம் வந்தாலும் அஹ்மதிய்யத்தில் தான் வர வேண்டும். அதற்காக துஆ செய்யுங்கள் என்று கூறினார்.

இரண்டாவது ஜனாஸா சவுத்ரி பஷீர் அஹ்மது சாஹிப் ஸராஃபின் ஜனாஸாவாகும். இவர் மேற்கு ஹல்கா, பெஸ்காகோட் என்ற இடத்தின் முன்னாள் தலைவர் ஆவார். நவம்பர் 24, 2012 –ல் 80 வயதில் இவர் வஃபாத் ஆகியுள்ளார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபி ஹஸ்ரத் மியான் அல்லாஹ் தத்தா சாஹிபின் மகனாவார். இவருக்கு ஏறக்குறைய 61 வருடங்கள் ஜமாஅத்தின் பல்வேறு பொறுப்புகளில் தொண்டு செய்யும் நல்வாய்ப்பு கிடைத்திருந்தது. 16 வருடங்கள் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் காயித் ஆகவும், 36 வருடங்கள் மால் செயலராகவும், 25 வருடங்கள் ரிஷ்தா நத்தா செயலராகவும், 22–23 வருடங்கள் ஜமாஅத் தலைவராகவும், 10 வருடங்களாக ஹல்காவின் அமீராகவும் இருந்துள்ளார்கள். இது தவிர இவர் 40க்கும் மேற்பட்ட முறை அதாவது ஏறக்குறைய 40 வருடங்கள் ஷூராவின் உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

தொழுகை, நோன்பு, தஹஜ்ஜுத் ஆகியவற்றை பேணி வந்தார்; அனுதாபம் கொண்டவர்; விருந்தோம்பல் செய்பவர்; கிலாஃபத் மற்றும் நிஸாமே ஜமாஅத்தில் விசுவாசம் மிக்கவர்; அசாதாரணமான தியாகம் செய்பவர், இன்னும் பல்வேறு சிறப்பு நற்குணங்களைக் கொண்டவர் ஆவார். நல்லவர், இறையச்சம் உடையவர், இவருக்கு மூன்று கலீஃபாக்களுக்கும் தொண்டு செய்யும் நல்வாய்ப்பு கிடைத்தது. இவ்வாறு பல சஹாபாக்களுக்கும் ஜமாஅத்தின் பொறுப்பாளர்களுக்கும் இவர் சுற்றுப் பயணம் செய்யும் போது தொண்டு செய்யும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

டெஸ்கா கோட் என்ற இடத்தில் ஒரு பெரிய நிலம் வாங்கி அங்கு பள்ளிவாசல் கட்டுவதற்கான நல்வாய்ப்பும் கிடைத்தது. மிகவும் தைரியசாலி. அச்சமற்றவர் ஆவார். இவரது சிறந்த குணயியல்புகளால் அஹ்மதி

அல்லாதவர்களும் நல்ல விளைவைப் பெற்றிருந்தனர். மூன்று முறை இறை வழியில் சிறைவாசம் செல்லும் பாக்கியம் பெற்றவர். வஸிய்யத் செய்தவராவார். இவரை இழந்து வாடுபவர்களில் ஒரு மனைவி, மூன்று மகள்களும் மூன்று மகன்களும் உள்ளனர். அல்லாஹ் இவரது பதவிகளை உயர்த்துவானாக!

மூன்றாவது ஜனாஸா மதிப்பிற்குரிய அப்துல் கஃப்பார் டார் சாஹிப் உடையதாகும். இவர் பிப்ரவரி 5, 2013 அன்று வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர் ராவல்பிண்டியில் வசித்து வந்தார். இறுதி வரை உடல் ஆரோக்கியத்துடன் இருந்தார். அபாயகரமான நிலை எதுவும் இருக்கவில்லை. வயது முதிர்ந்ததைத் தவிர வேறு உடல்ரீதியான பிரச்சனை ஏதும் கிடையாது. ஆரோக்கியமாக இருந்தார். 97 வயதான போதிலும் இரண்டாவது மாடிக்கு ஏறிப் போவார்கள். 25-26 படிகள் ஏறி இறங்குவார்கள். மரணமடைந்த தினத்தன்று மாலை 6.30 மணியளவில் தேநீர் குடித்து விட்டு இரவு உணவு உண்பதற்கு மனமில்லை. இரவு தூங்குவதற்கு மருந்து கொடுங்கள் என்று கூறினார்கள். இரவு 10.00 மணியளவில் இவரது பேரன் மருந்து கொடுப்பதற்காக அறைக்குள் சென்றபோது விளக்கு அணைந்திருந்தது. முகம் மஞ்சளாக இருந்தது. உடலில் எந்த அசைவும் இல்லை. அப்போது அவர்கள் இறந்திருக்கலாம். எனினும் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப் பட்டார்கள். மருத்துவர் பார்த்து விட்டு வஃபாத் ஆகி விட்டதாகக் கூறினார்.

இவர் 1916 -ல் பிறந்தார்கள். காஷ்மீர் மாநிலம் ஆஸனூர் என்ற ஊரைச் சேர்ந்தவர். இவரது குடும்பம் காஷ்மீரின் முதல் தூய அஹ்மதி குடும்பங்களில் ஒன்றாகும். இவரது பாட்டனார் ஹாஜி உமர் டார் சாஹிப் ஆவார். இவரது தந்தை அப்துல் காதிர் டார் சாஹிப் அவர்கள் ஆவார். இவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபாக்கள் ஆவர். அவ்வாறே இவரது சிறிய தந்தை ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்களும் சஹாபி ஆவார்கள். இவரது தாய்வழிப் பாட்டனார் மர்ஹூம் முஹம்மது ரமலான் பட் சாஹிப் கஷ்மீர் முஹல்லா ஸியால்கோட்டில் வசித்து வந்தார். அல்லாமா இக்பாலின் முஹல்லாவின் ஒரு பள்ளிவாசல் சபூத்தான்வாலி என்ற பெயரில் பிரசித்தி பெற்ற பள்ளிவாசலுக்கு இவர் போய் வந்து கொண்டிருந்தார். இதே முஹல்லாவில் ஹஸ்ரத் மவ்லவி அப்துர் கரீம் சாஹிப் ஸியால்கோட்டி அவர்களின் அழைப்புப் பணியின் விளைவாக பாட்டனார் காதியானுக்கு பயணம் மேற்கொண்டார்கள்.

ஹஸ்ரத் மவ்லானா அப்துல் கரீம் சாஹிப் தமது பாட்டனாரிடம் காஜா சாஹிப்! நீங்கள் ஒரு உயர்ந்த குறிக்கோளுக்காக, மார்க்கக் கல்வி பயில்வதற்காக வீட்டை விட்டு வெளியே செல்கிறீர்கள். இவர் ஹஜ் செய்வதற்காக புறப்பட்டார்கள். ஆனால் நோய் பரவியதன் காரணமாக ஹஜ் செய்ய முடியவில்லை. கூறுகிறார்: ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்கள் தோன்றிவிட்டார்கள். நபி கரீம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இமாம் மஹ்தியை ஏற்றுக் கொள்வது மட்டும் போதாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஸலாத்தையும் எட்ட வைக்க வேண்டும். இது வாஜிபாகும். எனவே நீங்கள் எங்களுடன் காதியானுக்கு வாருங்கள். தாம் இமாம் மஹ்தி என்று வாதம் செய்துள்ள இறை நேசரை சந்தித்து அவரைப் பற்றி ஆராய்ந்து பார்க்கலாம் என்று கூறினார்கள்.

இவ்வாறு இவர் காதியானுக்கு புறப்பட்டார்கள். இவர் அங்கு சென்றதும் பள்ளிவாசலில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மஜ்லிஸில் அமர்ந்திருந்தார்கள். அங்கு இருந்தவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தனர். அதற்கு அவர்கள் பதில் கூறிக் கொண்டிருந்தார்கள். அப்போது எங்கள் பாட்டனாருக்கு ஒரு யோசனை வந்தது. இந்த மஜ்லிஸ் ஆலிம்கள் மற்றும் நன்றாகப் படித்த மக்கள் அமர்ந்திருக்கும் கேள்வி பதில் நிகழ்ச்சியின் மஜ்லிஸ் ஆகும். நானும் எனது உள்ளத்தில் ஏதாவது ஒரு கேள்வியை யோசித்து வைத்துக் கொள்ள வேண்டும். இவர் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டவர் என்றால் கண்டிப்பாக என் உள்ளத்திலுள்ள கேள்விக்கு பதில் கொடுப்பார்கள் என்று எண்ணி தம் உள்ளத்தில் ஒரு கேள்வியை யோசித்தார்கள். நான் கேள்வியைக் கேட்காமலேயே எனக்கு இதற்கான பதிலும் வழிகாட்டலும் கிடைக்க வேண்டும். சத்தியத்தை இவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணினேன். நான் இதை நினைத்ததும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். சிலர் தொழுகின்றனர்; ஹஜ் கூட செய்கின்றனர். ஆனால் தமது இரத்த உறவினர்களுடன் சிறந்த முறையில் நடந்து கொள்வதில்லை. ஆனால் இது இஸ்லாமிய போதனைக்குப் புறம்பானதும் இறையச்சத்திற்கு எதிரானதும் ஆகும் என்று கூறினார்கள். இதனால் எனது உள்ளத்தில் நான் யோசித்து வைத்திருந்த கேள்விக்குப் பதில் கிடைத்து விட்டது. எனது உள்ளம் திறந்தது. நான் பைஅத் செய்தேன். உடனடியாக அவர் தமது மருமகனுக்கு கடிதம் எழுதினார். இவர் தன் சகோதரரின் ஒரு நிலத்தை அவருக்கு கொடுக்காமல் அபகரித்து வைத்திருந்தார். அதை அடையாளம் காட்டி

அவருக்கு கிடைக்க வேண்டிய பரப்பளவு நிலத்தை அவருக்கு கொடுத்து விடுமாறு எழுதினார்கள். இது அவர் அஹ்மதி ஆனதால் ஏற்பட்ட உடனடி விளைவாகும்.

டார் சாஹிப் காஷ்மீரிலுள்ள யாடிப்பூராவின் நடுநிலைப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றார். 1928 -ல் காதியனில் வந்து கல்வி பயின்றார்கள். மத்ரஸா அஹ்மதிய்யாவில் 7 வகுப்புகள் தேர்ச்சி பெற்றதும் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேர்ந்தார்கள். 1938 -ல் மவ்லவி ஃபாஸில் பட்டம் பெற்றார்கள். இவரது மனைவி முன்னதாகவே 2005-ல் வஃபாத் ஆனார்கள். இவருக்கு இரண்டு மகன்களும் இரண்டு மகள்களும் உள்ளனர்.

கஃப்பார் சாஹிபிற்கு குரல் வளம் நன்றாக இருந்தது. உரத்த குரல் உடையவராவார். இராகமாக படிப்பவராவார். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹின் தலைமையில் ஒரு மாநாடு நடந்தது. அதில் நஸ்ம் படிப்பதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தது. ஹஸ்ரத் மலிக் அப்துர் ரஹ்மான் சாஹிப் காதிமின் ஒரு உர்து கவிதையை இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹின் முன் நான் பாடினேன். இதை எழுதிய போது அவருக்கு வயது 85 ஆகும். ஆனால் அவருக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. அந்த வரி இவ்வாறு வருகிறது. இந்த வரிகள் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் பற்றியதாகும்.

தன்னந்தனியாக அந்தக் குழந்தை தனது கூட்டில் இருந்தது. இறைவனின் அருளால் அதற்கு முடிகளும் இறக்கைகளும் உருவாகி விட்டது.

அவர் கூறுகிறார்: நான் இந்த வரிகளைப் படிக்கும் போது ஒருமுறை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை சுட்டிக் காட்டுவேன். மறுமுறை முன்னால் அமர்ந்திருக்கும் பொதுமக்களைப் பார்த்து சுட்டிக் காட்டுவேன். இதனால் மிக அதிகமாக முழக்கங்கள் போடப்பட்டன.

ஒருமுறை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் ஒரு சம்பவத்தைக் கூறுகிறார்கள்: எனது தந்தையார் காதியானில் வைத்து ஒருமுறை உடல்நலம் சரியில்லாமல் ஆனார்கள். அவர்கள் என்னை இரண்டாவது கலீஃபாவிடம் மருந்து வாங்கி வரும்படி கூறி அனுப்பினார்கள். நான் அங்கு சென்றேன். அப்போது இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் வெளியில் செல்வதற்காக புறப்பட்டு வந்தார்கள். எனது தந்தை உடல்நலம் சரியில்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் உங்களிடம் மருந்து வாங்கி வரும்படி என்னை அனுப்பியுள்ளார்கள் என்று கூறினேன். அவர்கள் மீண்டும் உள்ளே சென்று அவர்களுக்கு மருந்து எடுத்துக் கொடுத்தார்கள். இந்தக் குடும்பத்துடன் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு அன்புடன் கூடிய தொடர்பிருந்தது. எல்லா காஷ்மீரிகளுடனும் அன்பு வைத்திருந்தார்கள்.

பிறகு இவர் ஜமாஅத்திற்கும் பல பணிகளைச் செய்துள்ளார். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இவரிடம் சில குறிப்பிட்ட பணிகளைச் சொல்லி வந்தார்கள். கஷ்மீரிலிருந்து இஸ்லாஹ் என்று ஒரு பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்தது. அதற்கும் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் வழிகாட்டி வந்தார்கள். இவர் சிறந்த ஆலோசனை கூறும் திறன் கொண்டவர். அல்லாஹ் இவருடைய பதவிகளை உயர்த்துவானாக! இவரை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவர் உயிருடன் இருக்கும் வரை ஷூராவின் உறுப்பினராக நியமித்திருந்தார்கள். இது ஸெய்யது அப்துல் அஸீஸ் சாஹிபின் அறிவிப்பு ஆகும். இவரது பேரன் கூறுகிறார்: தொழுகையின் பால் எங்களுக்கு அதிகமாக கவனமூட்டி வந்தார்கள். இன்னும் தொழுகைக்கு எவ்வளவு நேரம் எஞ்சியுள்ளது? என்று அடிக்கடி கேட்பார்கள். கலீஃபாக்களுடன் நிகழ்ந்த தமது சம்பவங்களை மிகவும் ஆர்வத்துடன் கூறி வந்தார்கள். அல்லாஹ் இவர்களின் பதவிகளை உயர்த்துவானாக! நான் முன்னதாக கூறியதற்கேற்ப இந்த மூன்று ஜனாஸா காயிப் தொழுகையையும் இன்சா அல்லாஹ் ஜும்ஆ தொழுகைக்குப் பிறகு தொழ வைப்பேன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRATH KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH MOSQUE, London.

on **08.02.2013**

Translated by : Maulavi S. ABDUL QADIR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456